செ.வெ. எண். 803 நாள் 21.09.2010

செய்தி வெளியீடு

## ஏழு மாநிலங்கள், 5 யூனியன் பிரதேசங்களின் எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகளின் மண்டல மாநாடு - இந்திய அரசின் நுகர்வோர் நலத் துறை கூடுதல் செயலாளர் திரு ராக்கேஷ் கக்கர், இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

******

இந்தியாவின் தெற்கு மற்றும் மேற்கு பகுதி மாநிலங்களான ஆந்திரா, கேரளா, கர்னாடகா, தமிழ்நாடு, மகாராஷ்ட்ரா, குஜராத், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி, கோவா, டாமன், லட்சத் தீவுகள், சில்வாசா ஆகிய யூனியன் பிரதேசங்களின் சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரிகளின் மண்டல மாநாட்டினை இந்திய அரசின் நுகர்வோர் நலத் துறை கூடுதல் செயலாளர் திரு ராக்கேஷ் கக்கர், இ.ஆ.ப. அவர்கள் இன்று (21.9.2010) சென்னையில் தொடங்கி வைத்தார்கள்.

நுகர்வோர் உரிமைகளையும், நலத்தினையும் பாதுகாத்து, எடையளவு சட்டங்களை அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் செயல்படுத்த மத்திய அரசு, இந்திய சட்டமுறை எடையளவு சட்டங்கள், 2009 என்ற புதிய சட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த சட்டத்தினை இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்திடவும், கடந்த 24.2.2010 அன்று நடந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தும், இச்சட்டங்களை செயல்படுத்த தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், இதற்கான கட்டிடங்கள் கட்ட நில ஒதுக்கீடு கோருதல் ஆகியவை குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டன. மேலும், பொருட்களை எடையிட பயன்படுத்தும் எடை பாலங்களை (Weigh Bridge) சோதனை செய்து தரமான நிலையில் வைத்திருத்தல், நடமாடும் ஊர்திகளை (Mobile Kits) கூடுதலாக மத்திய அரசிடம் கேட்டு பெறுதல் போன்றவை குறித்து விரிவாக ஆலோசனை செய்யப்பட்டன.

"விற்பனையாளர், நுகர்வோர் ஆகிய இரு தரப்பும் பொருட்களை விற்கவும், வாங்கவும், எடையளவு கருவிகள் முக்கியமாகும். இந்த எடையளவு கருவிகளை சரிபார்த்து முத்திரையிடுவதோடு, அவ்வப்போது சோதனை செய்வதும் எடையளவு கட்டுப்பாட்டு அலுவலர்களின் பணியாகும். நியாய விலை கடைகள், உழவர் சந்தைகள், மொத்த விற்பனை நிலையங்கள், நெல், பஞ்சு போன்ற விளை பொருள் கொள் முதல் நிலையங்கள் ஆகிய இடங்களுக்கு எடையளவுத் துறையினர் நேரடியாகச் சென்று எடையளவுக் கருவிகளை சரிபார்க்கவும், சோதனை செய்யவும் வேண்டியுள்ளது. இதற்கென மத்திய அரசு, சோதனை கூடங்களை (Mobile Lab) வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட

மேலும், பொருட்களை எடையிட பயன்படுத்தப்படும் எடை பாலங்களை (Weigh Bridge) சோதனை செய்ய நடமாடும் ஊர்தி (Mobile Kit) தற்போது செயல்பாட்டில் உள்ளது. மத்திய அரசு, தமிழ்நாட்டிற்கு இதுபோன்ற 4 வாகனங்களை வழங்கியுள்ளது. நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் மண்டலத்திற்கு ஒரு நடமாடும் ஊர்தி வீதம் வழங்குமாறு, மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த திட்டத்தில் எடையளவு சட்ட அமுலாக்கம் சேர்க்கப்பட்டு எந்த ஒரு எடையளவும் சரிபார்க்கப்படாமல் வியாபார உபயோகத்தில் இருக்கக் கூடாது என்ற நிலையை எட்ட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுக்கு வருவாய் ஏற்படுவதோடு, நுகர்வோர் நலன் முழுவதுமாக பாதுகாக்கப்படும்'' என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை முதன்மைச் செயலர் டாக்டர் டி. பிரபாகர் ராவ், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் திரு. உறன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., சட்டமுறை எடையளவு இயக்குநர் திரு பி.என். தீட்சித், தமிழ்நாடு தொழிலாளர் ஆணையரகத்தின் கூடுதல் ஆணையர் திரு அ. கருப்பசாமி, மாநில எடையளவு கட்டுப்பாட்டு அலுவலர் திரு ம. பாலசுப்பிரமணியன், பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த எடையளவு கட்டுப்பாட்டு அலுவலர்கள் உட்பட பலரும் பங்கேற்றனர்.

*******

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9